குற்றவியல் நீதித்துறை நடுவர், நீதிமன்றம், ஓமலூர்.
முன்னிலை: திருமதி.S.ஷர்மிளா, B.A.B.L.(Hons.), L.L.M.
குற்றவியல் நீதித்துறை நடுவர், ஓமலூர்.
சி.சி.எண்.182/2013

அ.சா.11

2025–ம் ஆண்டு ஜுலை 02–ம் தேதி புதன்கிழமை அரசு தரப்பு சாட்சி 11–வது நபரின் வாக்குமூலம் (1969–ம் ஆண்டின் 54–வது விதியின் 9–வது பிரிவின் ஏற்பாட்டின் படி) திருமதி.மோகனபிரியா என்பவரின் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | பிரபுவேல்பாரி | தொழில் | |
| தந்தை பெயர் | கனநாதன் | வயது | |
| கிராமம் | | தாலுக்கா | |

விசாரணை தொடங்கிய நேரம்: மதியம் 01.51 மணி,

Accused A2.Subramani Present. A1.Ramasami died and charge abated. Advocate Mr.Siddharthasankar present for A2. APP Mr.P.Suresh present.

**முதல் விசாரணை :**

1. நான் தாரமங்கலத்தில் குடியிருந்து, கணினி மையம் வைத்து நடத்தி வருகிறேன். சுமார் 10 வருடங்களுக்கு முன்பு நான் எனது கணினி மையத்தில் இருந்து தாரமங்கலம் அண்ணா சிலை அருகே வந்தபோது, அங்கு கூட்டமாக இருந்தது. அருகில் சென்று பார்த்தபோது, போலிசார் ஒரு நபரை பிடித்து விசாரித்துக் கொண்டிருந்தார்கள்.

2. அந்த நபரின் பெயர் ராமசாமி என்றும், அவர் லாரியை எடுத்ததாகவும் போலிசாரிடம் சொன்னார். பின்பு, போலிசார் என்னிடம் சாட்சி கையெழுத்து வாங்கினார்கள். தற்போது என்னிடம் காட்டப்படும் எதிரி ராமசாமி என்பவரின் ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள 2வது கையெழுத்து என்னுடையது. ( **அந்த கையெழுத்து அ.சா.ஆ.10 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**) என்னுடன் அல்லிமுத்து என்பவர் சாட்சி கையெழுத்து போட்டார். போலிசார் விசாரித்தார்கள்.

**2 ஆம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை :**

**3.** எதிரியை கைது செய்து ஒப்புதல் வாக்குமூலம் பெற்ற இடத்தில் சுமார் 10 நபர்கள் இருந்தார்கள். நான் கையெழுத்திட்ட தாளில் யார் எழுதினார்கள் என்றாலும்,

S SHARMILA
Digitally signed by S SHARMILA
Date: 2025.07.02 18:13:20 +0530

என்ன எழுதினார்கள் என்றாலும், போலிசார் எழுதினார். என்ன எழுதினார் என்று எனக்கு தெரியவில்லை. காவல் நிலையத்தில் வைத்து எழுதிவிட்டு, என்னிட் கையெழுத்து பெற்றார்கள் என்றால் சரியல்ல.

4. நான் அடிக்கடி காவல் நிலையம் செல்வேன் என்றால் சரி. நான், எதிரியின் வாக்குமூலத்தில் கையெழுத்து செய்யவில்லை என்றாலும், போலிசார் காவல் நிலையத்தில் வைத்து தயாரித்த ஆவணத்தில் கையெழுத்து செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை : இல்லை**

**விசாரணை முடிந்த நேரம் : மதியம் 01.57 மணி.**

S SHARMILA

Digitally signed by S SHARMILA
Date: 2025.07.02 18:13:24 +0530